# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2233/27 - 2021 ජූනි මස 23 වැනි බදාදා - 2021.06.23

*2233/27 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**7 ஆவது திருத்தம்**

இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பினை திருத்தியமைத்தல்

*பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2013, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய மற்றும் 1836/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீள திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல் வலுப் பெறும்.*

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2021, யூன் 23.*

**பகுதி I**

- *திருத்த இலக்கம் 01 – 2014, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதிய மற்றும் 1887/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகை அறிவித்தல்*
- *திருத்த இலக்கம் 02 – 2015, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய மற்றும் 1905/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகை அறிவித்தல்*
- *திருத்த இலக்கம் 03 – 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய மற்றும் 2006/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகை அறிவித்தல்*
- *திருத்த இலக்கம் 04 – 2017, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதிய மற்றும் 2049/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகை அறிவித்தல்*


1A - G 34476 — 25 (2021/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்த இலக்கம் 05 – 2019, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய மற்றும் 2138/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகை அறிவித்தல்

திருத்த இலக்கம் 06 – 2020, ஓகத்து மாதம் 25 ஆந் திகதிய மற்றும் 2190/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகை அறிவித்தல்

**பகுதி II**

7.1 **தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் விகிதம்**

| பிரிவு | சதவீதம் |
|---|---|
| 1. திறந்த ஆட்சேர்ப்பு – (கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைப் பெற்றுள்ள பொறியியலாளர்களுக்கு மாத்திரம்) | சேவையில் நிலவும் வெற்றிடங்களில் 75% |
| 1. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு | சேவையில் நிலவும் வெற்றிடங்களில் 25% |

7.1.1 நீக்கப்படுகின்றது.

7.2 **திறந்த ஆட்சேர்ப்பு**

7.2.1 உரிய பாடப் பரப்புக்களில் கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைப் பெற்றுள்ள பொறியியலாளர்கள் மாத்திரமே திறந்த ஆட்சேர்ப்பு முறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

7.2.3.2 தொழிற் தகைமைகள்

(i) 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர் சபையின், உரிய சேவை வகுதியின் கீழ் இணை பொறியியலாளராக அல்லது பட்டயப் பொறியியலாளராகப் பதிவு செய்திருத்தல் மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் இணை அங்கத்துவம் அல்லது முழு அங்கத்துவத்தைப் (பட்டயப் பொறியியலாளர் நிலை) பெற்றிருத்தல்.

7.2.3.3 ஏனையவை

(vi) மேலே 7.2.3.3. (i) முதல் 7.2.3.3 (v) வரை காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படாத அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தராக இருத்தல்.

7.2.4 வயது

7.2.4.2 மேலே 7.2.3.3 (vi) இன் கீழ் தகைமை பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான உயர்ந்த பட்ச வயதெல்லை 45 வருடங்களாகும்.

7.2.5 ஆட்சேர்ப்புமுறை

7.2.5.1 நாடளாவிய சேவைகள் மற்றும் அரசாங்க சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் பதவிகளுக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சையின் முதலாவது பகுதியின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை தொடர்பான விடயங்கள் அட்டவணை II இல் தரப்பட்டுள்ளன.

7.2.5.2.1 எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள் இரண்டு வினாப் பத்திரங்களுக்கும் பெற்றுக் கொண்டுள்ள மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். ஒவ்வொரு பாடப்பரப்பின் கீழும் ஆட்சேர்ப்பிற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் எண்ணிக்கையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

7.3 **மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு**

7.3.1.1 கோட்பாடுகளும் நிபந்தனைகளும்

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உள்ளாகியிருத்தலாகாது.

7.3.1.2 தகைமைகள்

தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதியில் பின்வரும் (i), (ii), (iii), (iv) மற்றும் (v) ஆம் பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஒரு தகைமையுடன் 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர் சபையின் கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளராகப் பதிவுசெய்திருத்தல்.

(iv) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்கு உரித்தான அலுவலர் ஒருவராக அல்லது இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலராக 21 வருடங்களுக்குக் குறையாத முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துடன் அச் சேவையின் விசேட தரத்திற்குப் பதவியுயர்வு பெற்றிருத்தல்.

(v) (அ) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்கு உரித்தான அலுவலர் ஒருவராக அல்லது இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலராக அல்லது புகையிரத திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவப் பதவியில் சேவையாற்றும் அலுவலர் ஒருவராக 15 வருடங்களுக்குக் குறையாத முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், அவ் ஆணைக்குழுவினாலும் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாடப் பரப்பின் கீழ் 04 வருட முழு நேர விஞ்ஞானமானிப் பொறியியல் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

(vi) நீக்கப்படுகின்றது.

10.1.1.1

(v) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உள்ளாகியிருத்தலாகாது.

10.2.1

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உள்ளாகியிருத்தலாகாது.

10.3.1

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உள்ளாகியிருத்தலாகாது.

அட்டவணை II

தற்போதுள்ள அட்டவணை II இற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை II பதிலீடு செய்யப்படுகின்றது.

**திறந்த பிரிவின் கீழ் இலங்கை பொறியியல் சேவையின் மூன்றாம் (III) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் எழுத்துப் போட்டிப் பரீட்சை**

நாடளாவிய சேவைகள் மற்றும் அரசாங்க சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் பதவிகளுக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சையின் முதலாவது பகுதி இதற்கு ஏற்புடையதாகும். இப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

01. பரீட்சை நடைமுறை - இப் பரீட்சையானது பின்வரும் வினாப் பத்திரங்களைக் கொண்டமைந்தது.

| வினாப் பத்திரம் | நேரம் | வினாப் பத்திரத்தின் தன்மை | சித்திபெறத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 1 ½ மணித்தியாலம் | 100 புள்ளிகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும்/ அல்லது சிறு வினாக்களைக் கொண்டமைந்தது. | 40 |
| கிரகித்தல் | 02 மணித்தியாலம் | 100 புள்ளிகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும்/ அல்லது சிறு வினாக்களைக் கொண்டமைந்தது. | 40 |

02. பாடத்திட்டம்

*நுண்ணறிவுப் பரீட்சை*

பரீட்சார்த்தியிடம் காணப்படும் தர்க்கம், பதிலீடு, பொருள்கோடல், தொடர்புகளைக் காணல், பெயர்ப்பு, சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், காரண காரியத் தொடர்புகளைப் புரிந்து கொள்ளல், எதிர்வு கூறல், தகவல்களை ஒழுங்குப்படுத்தல், கோலங்களை இனங்காணல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் போன்ற திறன்களை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்படும் பல்தேர்வு வகை வினாக்களைக் கொண்டமைந்தது.

*கிரகித்தல்*

பரீட்சார்த்தியிடம் காணப்படும் விடயங்களைப் புரிந்துகொள்ளும் திறன், தொடர்பாடல் ஆற்றல், சுருக்கம், வர்ணனை மற்றும் ஆக்கத்திறன் போன்ற ஆற்றல்களை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்படும் புறநிலை வினாக்களைக் கொண்டமைந்தது.

03. பரீட்சை மொழி மூலம்

I. இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
II. பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
III. பரீட்சார்த்திகள் இப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும் என்பதுடன், அதன் பொருட்டு ஒரு மொழி மூலத்தை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும்.
IV. பரீட்சார்த்திக்குத் தமது விண்ணப்பத்தில் காட்டப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

07-52

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.